செ.வெ.எண் : 37 நாள் : 23.01.2018

# தமிழ்நாடு உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை, உணவு பாதுகாப்பு பிரிவு காஞ்சிபுரம் மாவட்டம்

## உணவு பாதுகாப்பு உரிமம் / பதிவு பெறுவதற்கான விண்ணப்ப கட்டணம் செலுத்த இணையதள வசதி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தகவல்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம் பிரிவு 31-இன்படி உணவு வணிகர்கள் உரிமம் / பதிவு செய்ய வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. உரிமம் / பதிவு பெறாமல் உணவு வணிகம் செய்பவர்கள் உணவு பாதுகாப்பு சட்டம் 2006-ன்படி கடுமையான நடவடிக்கைக்கு உட்படுவார்கள்.

ஆண்டொன்றுக்கு 12 இலட்சத்திற்கு குறைவாக விற்று கொள்முதல் செய்பவர்கள் வருடத்திற்கு ரூ.100/- வீதம் பொது சேவை மையம் (CSC) மூலமாகவும் அல்லது "ATM கார்டு Credit Card மற்றும் Net Banking மூலமாகவும் www.foodlicensing.fssai.gov.in என்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம்.

ஆண்டொன்றுக்கு விற்று கொள்முதல் 12 இலட்சத்திற்கு மேல் இருந்தால் ரூ.2 ஆயிரமும், நாள் ஒன்றுக்கு ஒரு மெட்ரிக் டன்னுக்கு குறைவாக உற்பத்தி இருந்தால் ரூ. 3000/ (ரூபாய் மூவாயிரம் மட்டும்), ஒரு மெட்ரிக் டன்னுக்கு அதிகமாக இருந்தால் ரூ.5000/-( ரூபாய் ஐநூறு மட்டும்)ம் செலுத்தி மேற்படி இணையதளம் மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பிப்பதற்கு போட்டோவுடன் கூடிய அடையாள அட்டை, ஆதார் கார்டு, வாக்காளர் அடையாள அட்டை, பாஸ்போர்ட் போட்டோ - 2, இடம் சம்பந்தமாக ஆவணங்கள் போன்றவை அவசியமாகும். மேற்குறிப்பிட்ட தொகை தவிர வேறு கட்டணம் ஏதும் செலுத்த தேவையில்லை.

தரமில்லாத குடிநீர், பால், பால் பொருட்கள் , இதர உணவுப்பொருட்கள் மற்றும் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் விற்பனை தொடர்பான புகார்களை 94440 42322 என்ற "வாட்ஸ் ஆப்" எண்ணில் தெரிவிக்கலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், காஞ்சிபுரம்